இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித் துறை

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை - 2022

**SNP 8531/ESP2231 – விசேட தேவைகள்சார் கல்வியின் தத்துவ அடிப்படைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 21.08.2022 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

பகுதி - 1 இல் அமைந்துள்ள அனைத்து வினாக்களுக்கும் பகுதி - 2 இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி – I

1. அக்ரவேலின் (Aggrawel) கூற்றின் அடிப்படையில், கல்வியின் எண்ணக்கருவை உருவாக்கிய நான்கு (4) பிரதான காரணிகள் உள்ளன. அந்த நான்கு (4) காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை (1) விளக்குக.
2. எமில் டுர்கெய்மின் (Emile Durkheim) கருத்துகளுக்கமைய, கல்வியின் பொருளை விளக்குக.
3. யுனெஸ்கோவினால் (UNESCO) பரிந்துரைக்கப்பட்ட நான்கு (4) கல்வியின் தூண்களையும் பெயரிட்டு, மூன்றாவது (3வது) தூண் எவ்வாறு உள்ளடங்கற் கல்விக்கு உதவுகின்றது என்பதனை விளக்குக.
4. ஆர். எஸ். பீட்டரின் (R.S Peter) கூற்றுப்படி, கல்வியின் தத்துவம் கையாள வேண்டிய நான்கு (4) பிரதான பிரச்சினைகள் உள்ளன. அப்பிரச்சினைகளைப் பெயரிட்டு ஏதேனும் ஒரு பிரச்சினையை சுருக்கமாக விளக்கி, விசேட கல்வி ஆசிரியர்களுக்கு அது ஏன் அவசியம் என்பதனை விளக்குக.
5. உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியருக்குக் கல்வித் தத்துவம் ஏன் பயனுள்ளதாக அமைகின்றது?
6. கல்வியின் தேசிய இலக்குகள் பற்றிய விழிப்புணர்வு உள்ளடங்கற் கல்வி ஆசிரியருக்கு ஏன் அவசியம் என்பதற்கான நான்கு (4) காரணங்களைக் குறிப்பிடுக.
7. இலங்கையின் தேசிய கல்வி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்குத் தேவையான முக்கிய நிபந்தனைகளைக் குறிப்பிடவும்.
8. விசேட கல்வியின் பரிணாம வளர்ச்சியின் ஐந்து (5) கட்டங்களைக் குறிப்பிடுக.

(8x5+40 புள்ளிகள்)

பகுதி - 2

9.

அ. பிளேட்டோவின் (Plato) கல்வித் தத்துவத்தில் தெளிவாகக் காணப்படும் முக்கிய நோக்கங்களைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

ஆ. பிளேட்டோ அறிமுகப்படுத்திய கல்வித் திட்டத்தை விளக்குக

(7 புள்ளிகள்)

இ. பிளேட்டோவின் கல்விச் சிந்தனைகள் இலங்கைச் சூழலில் உள்ளடங்கற் கல்விக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதனை எடுத்துக்காட்டுகளை மேற்கோள்காட்டி விளக்குக.

(10 புள்ளிகள்)

10. ஜோன் டியுவியின் கருத்திற்கமைய (John Dewey) பிள்ளைகளின் தேவைகள், ஆர்வங்கள் மற்றும் திறன்களுக்கு ஏற்றவாறு பாடத்திட்டம் திட்டமிடப்பட வேண்டும்.

அ. ஜோன் டியுவியின் கல்விச் செயன்முறையின் இரண்டு (2) முக்கிய நம்பிக்கைகளை விளக்குக.

(5 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் பாடசாலைக் கல்வியின் பாடத்திட்டத்தில் ஜோன் டியுவியின் கல்வித் தத்துவம் எந்தளவுக்கு உள்வாங்கப்பட்டுள்ளது?

(7 புள்ளிகள்)

இ. பல்வேறு தேவைகளைக்கொண்ட மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் முறைகள் தொடர்பான ஜோன் டியுவியின் சிந்தனைகளை எவ்வாறு உள்ளடங்கல் அமைப்பில் பிரயோகிக்கிறீர்கள் என்பதனை உதாரணங்களை மேற்கோள்காட்டி விளக்குக.

(8 புள்ளிகள்)

11. ஜீன் ஜக் ரூசோ (Jean Jacques Rousseau) குழந்தை மையக் கல்வி முறையின் முன்னோடியாவார்.

அ. ஜீன் ஜக் ரூசோவின் குழந்தை மையக் கல்விச் சிந்தனைகளை விளக்குக

(8 புள்ளிகள்)

ஆ. ஜீன் ஜக் ரூசோ, மகாத்மா காந்தி மற்றும் மரியா மொண்டிசோரி அம்மையார் ஆகியோரின் கல்விச் சிந்தனைகளை பின்வரும் அம்சங்களின் கீழ் ஒப்பிட்டு ஆராய்க.

1. கல்விச் சிந்தனைகள்
2. பாடத்திட்டம்
3. பிள்ளை விருத்தி

(12 புள்ளிகள்)

12.

அ. 'மனிதனின் இயல்பு' பற்றிய கார்ல் மார்க்சின் (Karl Marx) கருத்துக்களை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள்காட்டி விளக்குக.

(8 புள்ளிகள்)

ஆ. கார்ல் மார்க்சின் கல்வி முன்மொழிவுகளைக் குறிப்பிட்டு, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அந்தக் கருத்துக்களை கல்வி முறையில் எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதனை விளக்குக. (12 புள்ளிகள்)

13. 'இயலாமையுடைய குழந்தைகளுக்கான கல்விச் சேவைகளை வழங்குவதற்காக பல்வேறு வகையான சிறப்புத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன'.

அ. 'இயலாமையுடைய குழந்தைகளுக்கான விசேட கல்விச் சேவைகளை வழங்குவதற்கான நான்கு (4) வகையான சிறப்புத் திட்டங்களை விளக்குக.

(5 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் கல்வி முறையில் ஒருங்கிணைந்த நிலை நடைமுறை எவ்வாறு உள்ளது என்பதை ஆராய்க.

(7 புள்ளிகள்)

இ. இலங்கைக் கல்விச் சூழலில் விசேட தேவைகளைக்கொண்ட மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்களை விளக்குக.

(8 புள்ளிகள்)

14.

அ. விசேட கல்வித் தேவைகள் மற்றும் விசேட தேவைகள்சார் கல்வி ஆகிய எண்ணக்கருக்களுக்கு இடையே உள்ள தொடர்பை ஆராய்க.

(6 புள்ளிகள்)

ஆ. இயலாமையுள்ள மாணவர்களின் கல்விக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தைச் சுருக்கமாக விளக்குக.

(6 புள்ளிகள்)

இ. இலங்கையில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான விசேட தேவைகள்சார் கல்வியின் நடைமுறைகளை விமர்சன ரீதியாக ஆராய்க.

(8 புள்ளிகள்)

*பதிப்புரிமைபெற்றது*